# கற்பனை செய்ய முடியாத அளவுக்கு விலைவாசி உயர்ந்துள்ளது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை

**சென்னை, மே 29 -**

**"கற்பனை செய்ய முடி யாத அளவுக்கு விலைவாசி உயர்ந்துள்ளது" - ஒன்றிய நிதியமைச்சரின் ஒப்புதல் வாக்குமூலம்! கோயில் விழாக்கள் மூலம் பக்தி போதையை ஊட்டி, 'மயக்க பிஸ்கெட்டு'களை மக்களுக்குத் தந்தால், பிரச்சினைகள் தீருமா? பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கான ரிசர்வ் வங்கியின் 'எதிர்பாரா இடர் நிதி' இருப்பு 7.5 சதவிகிதத்திலிருந்து 6.5 சதவிகிதமாகக் குறைந்துள்ளது! வருமுன்னர் காக்கத் தெரியாத அரசு, ஒன்றிய பா.ஜ.க. அரசு! தக்கப் பரிகாரம், ஆக்கப்பூர்வ நடவடிக்கை தேவை என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

நடுத்தர மக்களுக்கும், ஏழை, எளிய விவசாய மக்களுக்கும் தற்போது அன்றாட வாழ்வில் ஏற்பட்டு வரும் வேதனை மிக்க சோதனைகள் வார்த்தைகளால் வர்ணிக்க இயலாத ஒரு நித்திய சோகப் படலமாக உள்ளன.

கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்னால் பிரதமர் மோடி தலைமையில் அமைந்த ஆட்சி, 'ஜூம்லாக்கள்' என்று அவர்களே ஒப்புக்கொண்ட பொய்யான வாக்குறுதிகளைக் கூறி, பிடிக்கப்பட்ட ஆட்சி! அதற்கடுத்து அரசு அமைப்புகளையே ஆளுங்கட்சி வயப்படுத்திய நிலையில், அதன் பின்னர் நடந்த இரண்டு தேர்தல்களின் போது, ''வளர்ச்சி'' என்றும், ''எம் ஆட்சிதான் அமிர்தகால ஆட்சி'' என்றெல்லாம் ஓயாது பரப்புரை செய்தனர். ஊடகங்கள், கார்ப்பரேட் பெருமுதலாளிகளின் கருவிகளாகப் பெரிதும் அமைந்துவிட்டதையும், அதிகமான தேர்தல் நிதி முதலிய வாய்ப்புகளையும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டனர். மூன்றாம் முறை பா.ஜ.க. பெரும்பான்மை பெற முடியாத நிலையில், ஆந்திரா, பீகார் ஆகிய மாநிலங்களில் வெற்றி பெற்ற கட்சிகளின் (சந்திரபாபு நாயுடுவின், தெலுங்குதேசம், நிதிஷ் குமார் தலைமையிலான அய்க்கிய ஜனதா தளம்) ஆதரவோடு, ஒன்றியத்தில் ஆட்சியைத் தொடங்கி, சில மாதங்களிலேயே பீகார் ஆட்சியையும் தேர்தல் யுக்தி மூலம் தனதாக்கி, பா.ஜ.க. ஆட்சியை நடத்தி வருகிறது.


'மோடி கியாரண்டி' என்று கொடுத்த வாக்குறுதிகள் பலவற்றில் விலைவாசி ஏற்றத்தைத் தடுத்துக் குறைப்போம் என்பதும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை இருமடங்காகப் பெருக்க உதவுவோம் என்பதும், வேலையில்லா இளைஞர்களுக்கு ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தருவோம் என்பதும், மாநிலங்களிடையே 'கூட்டுறவு கூட்டாட்சி' யுடன் செயல்படு வோம் என்பதும் என்னவாயின?

**பெட்ரோல், டீசல் விலை உயர்வு!**

மக்களின் அன்றாட வாழ்வில், அவர்கள் பயன்படுத்தும் பெட்ரோல், டீசல், எரிவாயு (கேஸ்) முதலியவற்றின் விலை, கடந்த 11 நாள்களில், 4 ஆவது முறையாக பெட்ரோல் விலை லிட்டருக்கு 2.61 முதல் 2.17 வரை உயர்த்தப்பட்டுள்ளது. பெட்ரோல், டீசல் விலை அடுத்தடுத்து தவணை முறையில் உயர்த்தப்பட்டு, மக்களின் துன்பம் நாளும் பெருகிவருகிறது.

இந்த 11 நாள்களில் பெட்ரோல் லிட்டருக்கு ரூ.7.35-ம், டீசல் லிட்டருக்கு 7.53-ம் உயர்த்தப்பட்டு, மேலும் அதிகமாகிக் கொண்டே வரும் நிலைக்கு முற்றுப் புள்ளியே இல்லாத ஓர் அவலம்!

பிரதமர் மோடி ஆட்சியில், 2014 இல் பெட்ரோல் விலை ரூ.71.41 ஆக இருந்தது. இன்று (2026) அது ரூ.108.01 ஆக உள்ளது. அதாவது ரூ.36.6 காசுகள் (77 சதவிகிதம்) அதிகரித்துள்ளது. ஒரு லிட்டர் டீசல் விலை ரூ.56.71-லிருந்து, ரூ.99.98 ஆக உள்ளது. அதாவது ரூ.43.27 காசுகள் அதிகரித்துள்ளது.



இது ஏதோ இரு சக்கரம், நான்கு சக்கர வாகனப் பயணிகளை மட்டுமே பாதிக்கும் பிரச்சினை அல்ல; பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனங்கள், விவசாயிகள் உற்பத்தி தொடங்கி, சந்தையில் விற்கும் காய்கறிகள் முதல் எல்லா விலை யேற்றமும் இதனால் தவிர்க்க முடியாத, விரும்ப முடியாத விளைவுகளாகும்.

**நிதியமைச்சரின் ஒப்புதல்!**

இதனை உரிய, தகுந்த பொருளாதார நிதிக் கொள்கைமூலம் கட்டுப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், மும்பையில் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்ற போது ''கற்பனை செய்ய முடியாத அளவுக்கு விலைவாசி உயர்ந்துள்ளது'' என்று கூறியுள்ளார்.

விலைவாசி உயர்வினால் அழும் மக்களுடன் சேர்ந்து, அவரும் இப்படி 'ஒப்பாரி' வைத்தால், பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியுமா? பன்னாட்டுரீதியில் - மேற்காசி யப் போர் காரணமாக, கச்சா எண்ணெய் பீப்பாய் விலை உயர்வு காரணம் என்று முன்பு கூறினர். ஆனால், கச்சா எண்ணெயின் விலை உலகச் சந்தையில் குறைந்த போது, அதன்மூலம் நுகர்வோர் பலனடை யும் வகையில் இந்திய எண்ணெய் நிறுவனங்கள் ஏதாவது விலை குறைத்தது உண்டா? அல்லது அரசு நிதி உதவி செய்தது உண்டா?

மாநிலங்களின் தலையில் அந்தச் சுமையைச் சுமத்தியதுதானே ஒன்றிய அரசின் நடவடிக்கையாக இருந்தது.

அதுமட்டுமல்ல, இந்த நிலைமைகளைச் சமாளிக்க, இப்போது ஒன்றிய அரசால் எடுக்கப்பட்டுள்ள மற்றொரு அதிர்ச்சியூட்டக் கூடிய ஒரு பொருளாதார - நிதித்துறை நடவடிக்கை என்ன தெரியுமா?

இந்திய ரிசர்வ் வங்கி 2025-2026 நிதியாண்டிற்காக இதுவரை இல்லாத அளவாக 287 லட்சம் கோடி ரூபாயை ஒன்றிய அரசுக்கு உபரிப் பணமாக மாற்ற முடிவு செய்துள்ளது.

அவசர காலப் பாதுகாப்புக்காக பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக இந்திய ரிசர்வ் வங்கி வைத்திருக்கும் 'எதிர்பாரா இடர் நிதி'தான் (Contingency Risk Fund) அது. இதன் இருப்பு 7.5 சதவிகிதமாக கடந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

**இந்த ஆண்டு 6.5 சதவிகிதமாகக் குறைந்துள்ளது!**

விதை நெல்லை எடுத்து விருந்து வைப்பது போன்ற ஒரு நிலைதான்.

போர் தொடங்கிய சில வாரங்களுக்குப் பின்பு கூட, "கவலைப்பட வேண்டாம், நம்மிடம் ஏராளம் எண்ணெய் இருப்பு இருக்கிறது'' என்ற ஒரு நம்பிக்கையைப் பரப்பியது பிரதமர் மோடி ஆட்சி! 'அந்நியச் செலாவணியா - ஏராளம் நமது சேமிப்பில் இருக்கிறது; ரூபாய் மதிப்பு பன்னாட்டுச் சந்தையில் எவ்வளவு வீழ்ந்தாலும், நம்மைப் பாதிக்காது'' என்றெல்லாம் கூறி, மக்களை நம்ப வைத்து, இன்று ஏமாற்றியிருக்கிறார்!

"உரத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கப் பாருங்கள்!"

''பெட்ரோல் மற்றும் டீசல் பயன்பாட்டைக் குறைக்கும் வகையில் தனி நபர் வாகனங்களுக்குப் பதிலாக பொதுப்போக்குவரத்தை அதிகம் பயன்படுத்த வேண்டும்!"

''அந்நியச் செலாவணியைப் பெருமளவில் சேமித்து நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த, தங்கம் வாங்குவதை அடுத்த ஓராண்டிற்குத் தவிர்க்க வேண்டும்."

''அத்தியாவசியமற்ற வெளிநாட்டுப் பயணங்களை அடுத்த ஓராண்டுக்கு ஒத்திவைக்கவேண்டும்."

"நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த இந்திய இளைஞர்களின் கடின உழைப்பில் தயாராகும் உள்நாட்டுத் (சுதேசி) தயாரிப்புகளை மட்டுமே அதிகளவில் வாங்க வேண்டும்'' என்ற 'கீதோபதேசம்'தான் இதற்குச் சரியான வழியா?

இறக்குமதிகளைக் குறைத்து, ஏற்றுமதிகள்மூலம் நம் வருவாய் - அந்நியச் செலாவணிகளைப் பெருக்க என்னென்ன புதிய திட்டங்கள் உள்ளன என்பதுபற்றித் தெளிவான கொள்கை விளக்கங்களோ, நடைமுறைகளோஇல்லை.


**தக்க பரிகாரம்!**

சோம்நாத் கோயில் விழாக்கள் மூலம் பக்திப் போதையை ஊட்டி, 'மயக்க பிஸ்கெட்டு'களை மக்களுக்குத் தந்தால், பிரச்சினைகள் தீருமா?

வருமுன்னர் காக்கத் தெரியாத அரசு, ஓர் அரசு தானா?

தக்க பரிகாரம், ஆக்கப் பூர்வ நடவடிக்கை உடனடித் தேவை!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சிரிக்கின்ற மல்லிகையின் காதுகளில்
செண்பகம் தான் ஏதோ சேதி தனைச் சொல்ல!
சேர்ந்திருவர் சாமந்தியிடம் ஓடி அவன் செவியில் வாய்
வைத்தார்!! பின்னர்,
மூவருமே முல்லையிடம் முனகிவிட்டு அவளோடு நால்வருமே
நந்தவனம்
முழுவதும் நடைபோட தொடங்கிவிட்டார். பூமானே! புகழுக்குன்றே!!
போனாயோ என் தலைவா? கோமானே! கொள்கை வேந்தே!!
உன்னைக்
கொள்ளையிட்ட கூற்றெங்கே? எனையெடுத்து முத்தமீந்து
இதயத்தில் ஏற்றுக்
கொண்டாய் இன்று எனை விடுத்து நீ மட்டும் நெடுந்தொலைவு
போய்விட்டாய்
என்ன நியாயம்! மடை திறந்த வெள்ளம் போல் கண்ணீர் கொட்டி
மயங்கிவிடும்
நிலையிலே ரோஜா நின்றாள்!!!

**(இந்தக் கவிதை வரிகள் ஆசியாவின் ஜோதி நேரு பெருமான் அவர்கள் 1964 ஆம் ஆண்டு மே திங்கள் 27 ஆம் நாள் மறைந்த அன்று முத்தமிழ் அறிஞர் - தமிழர்களின் நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்துள்ள நமது கலைஞர் அவர்கள் எழுதிய கவிதாஞ்சலி.)**

### த.வெ.க. ஆட்சியில் தொடரும் பாலியல் வன்கொடுமை; ஜெயங்கொண்டத்தில்

# மாற்றுத்திறனாளி பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்த குற்றவாளிகளை கைது செய்யாதது ஏன்?

## பொதுமக்கள் கேள்வி!

அரியலூர், மே 29 –

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் பகுதியில் 26 வயதுடைய மாற்றுத்திறனாளி பெண் வசித்து வருகிறார். இந்நிலையில் அதே பகுதியைச் சேர்ந்த சௌந்தரராஜன் (56) என்பவர் மாடுமேய்க்க சென்ற இடத்தில் 26 வயதுடைய மாற்றுத்திறனாளி பெண்ணை வலுகட்டாயமாக பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறப்படுகிறது.

அதேபோன்று அதே கிராமத்தில் வசிக்கும் ரமேஷ் (46) என்பவரும், மாற்றுத்திறனாளி பெண்ணை அவரது வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் அடித்து துன்புறுத்தி பாலியல் வன்கொடுமை செய்துள்ளதாகவும் கூறி, பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிப் பெண்ணின் தந்தை மீன்சுருட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் பேரில் வழக்குப் பதிவு செய்த போலீசார் குற்றவாளிகளை கைது செய்வதில் காலதாமதப்படுத்தி வருவதாக தற்போது புகார் எழுந்துள்ளது.

காரணம் தற்போது தமிழகம் முழுவதும் பாலியல் வன்கொடுமை அதிகமாக நடைபெற்று வருவதாகவும், இதை கருத்தில் கொண்டு த.வெ.க. ஆட்சிக்கு கெட்ட பெயர் வரும் என்று போலீசார் அலட்சியப் படுத்தி வருவதாகவும் புகார் எழுந்துள்ளது.

அதே நேரத்தில் இச்சம்பவம் குறித்து போலீசாரிடம் செய்தியாளர்கள் கேட்கும்போது குற்றவாளிகள் இருவர் மீதும் வழக்குப் பதிவு செய்து கைது செய்ததாகவும் ஆனால் குற்றவாளி களின் புகைப் படத்தை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அனுமதி இல்லாமல் கொடுக்க மாட்டேம் என்று கறாராக தெரி வித்துள்ளனர்.

இதனால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான மாற்றுத்திறனாளி பெண்ணுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு யார் பொறுப்பு என்பது குறித்து உண்மை நிலையை மக்களிடத்தில் எடுத்துச் செல்வதற்கும், அந்தப் பெண்ணுக்கு ஊடகத்தின் வாயிலாக நீதி கிடைப்பதிலும் சிக்கல் ஏற்பட் டுள்ளது.

பாதுகாப்பு கொடுக்க வேண்டிய போலீசாரே குற்றவாளிகளுக்கு துணை போகலாமா? என்று பொது மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே த.வெ.க. ஆட்சிக்கு போலீசார் வக்காலத்து வாங்காமல் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்த குற்றவாளிகளை கைது செய்து, அவர்களின் புகைப் படங்களை ஊடகத்தின் வாயிலாக தெரிவித்து பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி பெண்ணுக்கு நீதி கிடைப்பதற்கு போலீசார் உதவியாக இருக்க வேண்டும் என மாவட்ட காவல்துறைக்கு பொதுமக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் கண்ணீர் மல்க கோரிக்கை வைத்துள்ளனர்.

### முழுமையாக பயிர்க் கடன் தள்ளுபடி கோரி

# தலைமைச் செயலகத்தை விவசாயிகள் முற்றுகை!

## தடுப்புகள் அமைத்து போலீஸ் குவிக்கப்பட்டதால் பதற்றம்!



சென்னை, மே 29 -

த.வெ.க. தேர்தலின் போது அளித்த வாக்குறுதிப்படி அனைத்து விவசாயிகள் வாங்கிய கூட்டுறவு பயிர் கடன் முழுமையாக தள்ளுபடி செய்ய கோரி 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் தலைமைச் செயலகத்தை முற்றுகை யிட்டனர். இதையடுத்து, தடுப்புகள் அமைத்து போலீசார் குவிக்கப்பட்டதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

த.வெ.க. ஆட்சிக்கு வந்தால் சிறு, குறு மற்றும் பெரிய விவசாயிகள் என 5 ஏக்கர் வரை நிலம் வைத்துள்ளவர்களின் பயிர் கடன்கள் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என்று தவெக தலைவர் விஜய் தனது தேர்தல் வாக்குறுதியாக அறிவித்திருந்தார். அதன்படி தற்போது தமிழக முதல்வராக விஜய் பதவியேற்ற பிறகு, தேர்தலின் போது அளித்த வாக்குறுதியை மீறி கூட்டுறவு வங்கியில் ரூ.50 ஆயிரம் வரையிலான பயிர் கடன் தள்ளுபடி என்றும், அதற்கு மேல் கடன் வாங்கிய விவசாயிகளுக்கு ரூ.20 ஆயிரம், ரூ.10 ஆயிரம் மற்றும் ரூ.5 ஆயிரம் மட்டும் தள்ளுபடி என்று நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பு மாநிலம் முழுவதும் உள்ள விவசாயிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், பயிர் கடன் குறைந்தது ரூ.1 லட்சத்தில் இருந்து ரூ.2 லட்சம் வரை சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றுள்ளனர். அந்த கடனை தற்போது உள்ள கோடை வெளியிலால் கட்ட முடியாமல் திணறி வருகின்றனர். இந்த நிலையில் தமிழக அரசின் ஒரு தலை பட்சமான ரூ.50 ஆயிரம் வரை வாங்கிய பயிர் கடன் மட்டும் முழுமையாக தள்ளுபடி என்று அறிவித்ததற்கு விவசாயிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

**கடும் வாக்கு வாதம்!**

இதையடுத்து, தமிழக விவசாயிகள் சங்க நிர்வாகி நாராயணசாமி தலைமையில் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் நேற்று முன்அறிவிப்பின்றி சென்னையில் உள்ள தலைமை செயலகம் அருகே ஒன்று கூடினர். இதை கவனித்த பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் என்ன என்று விவசாயிகளிடம் விசாரித்தனர். அப்போது கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய பயிர் கடனை தவெக தேர்தலின் போது அளித்த வாக்குறுதியின்படி முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாக முதல்வரை நேரில் சந்தித்து மனு அளிக்க வந்ததாக தெரிவித்தனர்.

ஆனால் போலீசார் தற்போது முதல்வரை பார்க்க முடியாது, அவரை பார்க்க முன்அனுமதி பெறவேண்டும் என்று கூறியதாக கூறப்படுகிறது.

இதனால் ஆத்திரமடைந்த 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் தலைமைச் செயலகத்தை முற்றுகையிட்டனர். இதை சற்றும் எதிர்பார்க்காத போலீசார் தலைமைச் செயலகத்திற்குள் யாரும் செல்ல முடியாதபடி தடுப்புகள் அமைத்து விவசாயிகளை தடுத்து நிறுத்தினர். இதனால், அங்கு சிறிது நேரம் போலீசாருக்கும் விவசாயிகளுக்கும் தள்ளுமுள்ளு மற்றும் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

அப்போது, விவசாயிகள் பயிர்க் கடனை முழுமையாக தள்ளுபடி செய்தால் தான் நாங்கள் இங்கிருந்து கலைந்து செல்வோம் என்று கூறி தொடர் முற்றுகையில் ஈடுபட்டனர். ஒரு கட்டத்தில் போலீசார் விவசாய சங்க நிர்வாகிகள் சிலரை மட்டும் உள்ளே மனு அளிக்க அனுமதி அளிக்க முடியும் என்று கூறிவிட்டனர். இதனால் விவசாயிகள் அனைவரும் தலைமை செயலகம் முன்பு ஒன்று கூடியதால் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

**விவசாய சங்க நிர்வாகி பேட்டி!**

இதற்கிடையே விவசாய சங்க நிர்வாகியான நாராயணசாமி நிருபர்களிடம் கூறுகையில், 'பயிர்க் கடனை பொறுத்தமட்டில் சிறு, குறு விவசாய பயிர் கடன்கள் தான் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பெரும் விவசாயி களுக்கு கடன் தள்ளுபடி அறிவிக்கவில்லை. சிறு விவசாயிகள் என்றாலும் கூட ஏக்கருக்கு கரும்பு சாகுபடி செய்தால் ரூ.60 ஆயிரம் வரை செலவாகிறது. எனவே தற்போது செய்துள்ள பயிர்க் கடன் தள்ளுபடியை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

தற்போது உள்ள முதலமைச்சர் புதிய முதல்வராக இருப்பதால், மறு பரிசீலனை செய்து விவசாயிகளின் கடன்களை கடந்த கால ஆட்சியாளர்கள் எப்படி எந்தவித பாகுபாடும் இல்லாமல் தள்ளுபடி செய்தார்களோ அதேபோல் அனைத்து விவசாயிகளின் பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். மேலும், நீண்ட கால பிரச்சினையான மேகதாது அணை பிரச்சினை, தென்னை மற்றும் பனை மரங்களில் இருந்து கள் இறக்கும் தடை நீக்க க்கோரிய பிரச்சினை, நதிகள் இணைப்பு கோரி முதல்வரை சந்தித்து மனு அளிக்க உள்ளோம். முதல்வரை சந்திக்க அனுமதிக்காமல் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொள்ளும் நிலை தற்போது உள்ளது' என்றார்.




கோயம்புத்தூர் மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி உடனடியாக தீர்வுகாண அறிவுறுத்தினார். உடன் மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், துணை ஆணையாளர்கள் த.குமரேசன், அ.சுல்தானா, மாநகர தலைமைப் பொறியாளர் விஜயகுமார் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கே. மன்னப்பன்**

**மே 29 (2021)**



**இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**நெருக்கடி காலத்தில் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்தபோதும் கழகத்தின்மீது உறுதியாக பற்றுடன் திகழ்ந்தார்.**

**கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**